**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 319/2018**

Deposition of the witness for Prosecution **PW** 2

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பெரோஸ் கான் (மருத்துவர்) |
| Father's/Husband's Name | : | முகமது ஷெரிப் |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Caste and Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (29.05.2024).

(எதிரி வழக்கறிஞருடன் ஆஜர்.)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சேர்ந்தமரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 17.03.2018 ஆம் தேதி மதியம் 02:30 மணியளவில் தென்காசி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்த போது ராஜேந்திரன் மனைவி மாலா என்ற பெண் அவரது உறவினர் (அக்கா மகள்) அருள்மணி என்பவரால் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார். நான் மேற்படி மாலா என்பவரை பார்த்தபோது அவர் சுய நினைவுடன் காணப்பட்டார். நான் அவரை விசாரித்த போது அதே தேதியில் காலை 11:30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து அடையாளம் தெரிந்த ஒரு நபர் மாலாவை அருவாளால்

தாக்கியதாக கூறினார்.

2. நான் அவரை பரிசோதனை செய்ததில் அவரது உடலில் இடது பக்கவாட்டு தலையில் 4x3x2 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. வலது தோள்பட்டையில் 3x2x2 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. மேற்படி காயத்திற்கு அருகில் வலது பக்க தோள்பட்டையில் 10x3x2 சென்டிமீட்டர் அளவில் தோள்பட்டையில் இருந்து அக்கில் பகுதி வரை (Extended to Axillary region) சிதைந்த காயமும் காணப்பட்டது. அவரது இடது முன்னங்கையில் 7x2x2 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயமும், வலது முன்னங்கையில் 5x3x2 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயமும் காணப்பட்டது. வலது புற முதுகில் 13 x 2 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. அதன் அருகில் 7x2x2 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது மற்றும் வலது முட்டிக்காலில் 7x2x1 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயமும், இடது கால் முட்டியில் 8x2x1 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயமும் காணப்பட்டது. வலது காலில் அடிப்பாத பகுதியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. வயிற்றுப் பகுதியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3. மேற்படி நபருக்கு தென்காசி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை வழங்கி மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்

கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி நபர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் கடந்த 17.03.2018 ஆம் தேதி முதல் 06.04.2018 ஆம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மேற்படி நபருக்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை விபர அறிக்கைகளை பார்வையிட்டு மேற்படி நபருக்கு வலது பக்க தோள்பட்டையில் மற்றும் வலது பக்கம் முன்னங்கையில் எலும்பு முறிவு இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்ததால் மேற்படி காயங்கள் கொடுங்காயங்கள் என கருத்துரை வழங்கினேன். (**மேற்படி மாலா என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று கருத்துரை அ.சா.ஆ.2 ஆகவும், திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை விபர அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

4. போலீசார் உங்களை விசாரிக்கும் போது விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக உள்ள காயங்களை போலீசாரின் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நான் அவர்களிடம்

சொன்னேன் ஆனால், அவர்கள் பதிவு செய்த வாக்குமூலத்தில் விபத்து பதிவேட்டின் படி காயங்கள் என்று சுருக்கமாக குறிப்பிட்டுள்ளார்கள். முதல் விசாரணையில் நீங்கள் கூறியுள்ள காயங்கள் எதுவும் போலீசார் பதிவு செய்த விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் AR No: 0249686 இன் படி முதல் சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மேற்படி உங்கள் வாக்குமூலத்தில் காயங்கள் தனித்தனியாக குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். நான் சொன்னேன். அவர்கள் சுருக்கமாக எழுதியுள்ளார்கள். நீங்கள் சொன்னது போல் உங்களிடம் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றும், போலீசார் அவர்களாகவே தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. உயரமான இடத்திலிருந்து கண்ணாடி பொருட்கள் உடைந்து கிடக்கும் இடத்தில் விழும் போது மேற்ச்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு உண்டு.

**நீதிமன்ற கேள்வி:**

6. மேற்படி உயரமான இடத்தில் இருந்து கண்ணாடி பொருட்கள் உடைந்து கிடக்கும் இடத்தில் விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட

வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள், அது எந்த அடிப்படையில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் மேற்படி நபர் மேலே இருந்து கீழே விழுந்து உருளும்போது ஏற்பட வாய்ப்புள்ளது. எந்த அடிப்படையில் இவ்வாறு கருத்துரை வழங்குகிறீர்கள் என்றால் கீழே விழுந்து கண்ணாடி பொருட்கள் கிழித்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற அடிப்படையில் கூறுகிறேன். மேற்படி நபரை நீங்கள் பரிசோதனை செய்தபோது கண்ணாடி பொருட்கள் ஏதேனும் காணப்பட்டதா என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:

போலீசார் உங்களிடம் கருத்துரை பெறும் போது அரிவாள் எதையும் காண்பித்து கருத்துரை பெறவில்லை என்றால் ஆமாம்.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM

Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2024.05.30 10:51:36 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai